செ.வெ.எண்.219/2009(செமதொஅ) நாள் : 27.07.2009.

**சுனாமியால் பாதிக்கப்பட்டவர் மற்றும் கண்பார்வையற்றவருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்(பொ) திரு. அ.நம்பிராசன் அவர்கள் வழங்கினார்**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கானாத்தூர் ரெட்டிகுப்பம் கிராமத்தை சேர்ந்த திரு. வி. சண்முகவேலு, த/பெ. வேலு என்பவர் சுனாமியின் போது இவரது வீடு முழுமையாக பாதிக்கப்பட்டதாகவும் தனக்கு மாவட்ட நிர்வாகம் வீட்டுமனைப் பட்டாவும், தொழில் செய்ய உதவிட வேண்டும் எனவும் கோரியிருந்தார். இதனை பரிசீலனை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்களால் ஆட்டோ ரிக்ஷா ஒன்றினை தொழில் செய்து பிழைப்பதற்காக வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின்படி, தற்போது காஞ்சிபுரம் வட்டம், மேல்கதிர்பூர் ஊராட்சியில் புலம் எண். 724/41ல் வீட்டுமனைப் பட்டா மாவட்ட ஆட்சித்தலைவர்(பொ) திரு.அ.நம்பிராசன் அவர்களால் வழங்கப்பட்டது. அதே போல காஞ்சிபுரம் பல்லவன் மேடு பகுதியை சேர்ந்த கண் பார்வையற்ற திரு. அன்வர் பாஷா, த/பெ. பாஷாசாகிப் என்பவர் தனக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க கோரியிருந்தார். அவரது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த மாவட்ட ஆட்சியர்(பொ) திரு.அ.நம்பிராசன் அவர்கள் அவருக்கும் மேல்கதிர்பூர் கிராமத்தில் புலம் எண். 724/40ல் வீட்டுமனை ஒன்றினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வருவாய் கோட்ட ஆட்சியர் திரு. எஸ். பன்னீர் செல்வம், காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு. ஜோதி பிரகாசம், துணை வட்டாட்சியர் திரு. முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.